சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கால்நடை பராமரிப்புத் துறை – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திருமதி எஸ்.குணசுந்தரி, த/பெ. (லேட்) வி.சுந்தரம் – இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது – விதித்தளர்வு செய்து பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (காப-7) துறை

பிலவ வருடம், திருவள்ளுவர் ஆண்டு 2052, ஆனி மாதம் 25–ம் நாள்

அரசாணை (டி) எண். 180 நாள் 09.07.2021

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018
2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கடித ந.க.எண். 77717./ஆர்.3/2012, நாள் 28.11.2019 (ம) 21.1.2021
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.

-----

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கடிதத்தில், காஞ்சிபுரம் மண்டலம், மாகரல், கால்நடை மருந்தகத்தில், கால்நடை பராமரிப்பு உதவியாளராக பணியிலிருக்கும் போது மரணமடைந்த வி.சுந்தரம் என்பவரது மகள் திருமதி எஸ்.குணசுந்தரி, என்பவருக்கு கருணை அடிப்படையில் காஞ்சிபுரம் மண்டலம், சைதாப்பேட்டை, கால்நடை பன்முக மருத்துவமனை, பிரதம மருத்துவர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் 27.06.2016 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும், தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 27.06.2016 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறும் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கருத்துருவை அரசு ஏற்று அதனை நன்கு ஆய்வு செய்து, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி எஸ்.குணசுந்தரி என்பவருக்கு பணி நியமனத்திற்கு முன்பு திருமணமானதால், அவரது பணியினை தனியர் பணியில் சேர்ந்த நாளான 27.06.2016 முற்பகல் முதல் வரன்முறை செய்ய அப்போது நடைமுறையிலிருந்த தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில் விதி 54A (தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 15) மற்றும் பணப்பலன்கள் நியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு வழங்க அப்போதைய தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொது விதிகளில் விதி 23(a)(ii) (தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 28(2)) ஆகியவற்றை தமிழ்நாடு

அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–ல், பிரிவு 58–ன் கீழ் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி தளர்வு செய்து அரசும் அவ்வாறே ஆணையிடுகிறது.

3. கால்நடை பராமரிப்புத் துறையில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி எஸ்.குணசுந்தரி, த/பெ. (லேட்) வி.சுந்தரம், என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 27.06.2016 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்படுவதால் இதனை நியமன அலுவலருக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்வதுடன், இது தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யவும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும் இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதியத் தொகை ஏதும் நிலுவை இருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார். மேலும் தனியரின் அசல் ஆவணங்கள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அதனைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குந கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண்.6698/Q1/2021, நாள் 15.04.2021 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.12481/G2/2021–1, நாள் 18.05.2021–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தெ.சு.ஜவஹர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை–35. (இ)
திருமதி எஸ்.குணசுந்தரி, இளநிலை உதவியாளர் (இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை–35 வழியாக).
மாநிலக் கணக்காயர், சென்னை–18/18(பெ).
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.

நகல்
தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–9.
மனிதவள மேலாண்மைத்துறை, சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம்– மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு /உதிரிப்படிகள்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

12/07/2021

(கி. செந்தில் நாதன்)
அரசு சார்புச் செயலாளர்

12.7.21